S.T.C .NO.876/2024 Date:20.08.2025
Page No.

பு.சா.1. சதீஷ், த/பெ.முருகேசன், வயது.35

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் இந்த காசோலை வழங்கும்போது சேல்ஸ் டேக்ஸ் அலுவலகத்தில் டெக்னிக்கல் சப்போர்ட் வேலை செய்து வந்தேன். எனக்கு சம்பளம் ரூ.30000/– நான் அந்த அலுவலகத்தில் வேலை செய்ததற்கு ஆவணத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இதை நீதிமன்றத்தில் தான் முதல்முறையாக கூறுகிறேன் என்றால் சரிதான். நான் பணிபுரிந்த அலுவலகத்தில் எனக்கு அடையாள அட்டை கொடுக்கவில்லை என்றால் சரிதான். காலை 10.00 – மாலை 5.00 மணி வரை வேலை செய்வேன். நான் வருமான வரி கட்டுகிறேன் என்றால் வருமான வரி கட்டும் அளவிற்கு எனக்கு வருமானம் இல்லை. அதனால் எனக்கு கடன் வழங்க தகுதி இல்லை என்றால் சரியல்ல. எனக்கு எதிரியை எப்படி தெரியும் என்றால் எதிரி உஜ்ஜீவன் வங்கியில் வேலை செய்துகொண்டிருந்தபோது பழக்கம். அவர் அந்த வங்கியில் பணிபுரிந்ததற்கு ஆவணத்தினை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். எனக்கும் எதிரிக்கும் கொடுக்கல் வாங்கல் இதற்கு முன்பு இல்லை என்றால் சரியல்ல, ஆனால் ஆன்லைன் மூலம் நான் பணம் அனுப்பவில்லை. எங்க வீட்டு நிகழ்ச்சிக்கு நான் அவரை அழைத்து புகைப்படம் ஏதும் எடுக்கவில்லை என்றால் சரிதான். அவர் வீட்டிற்கும் நான் நிகழ்ச்சிக்கு சென்று புகைப்படம் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் எதிரிக்கு பணம் அளிக்கும் போது சாட்சிகள் யாரேனும் இருந்தார்களா என்றால் இல்லை. தனபிரகாஷ் எனக்கு தெரியுமா என்றால் எதிரியின் மூலம்தெரியும். தனபிரகாஷ் எதிரியின் மீது காசோலை வழக்கை JM–I நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கிற்கு எனது தரப்பு வழக்கறிஞர் லோகநாதன் தான் அதிலும் வழக்கறிஞர் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தற்போது இந்த வழக்கிலும் வழக்கறிஞர் லோகநாதன் நான் எனக்காக ஆஜராகி உள்ளார் என்றால் சரிதான். தனபிரகாஷ் எதிரி மீது வழக்கு தொடர்ந்தது எனக்கு தெரிந்திருந்தும் அவர் எனது நண்பர் என்பதால் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் எந்த மருத்துவ செலவிற்காக கடன் பெற்றார் என்று அவரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. எதிரி என்னிடம் குடும்ப

செலவிற்காக கடன் பெற்றார் என்று எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். ரூ.3,00,000/- என்னால் எவ்வாறு எதிரிக்கு கொடுக்க முடிந்தது என்றால் நான் **Savings Account**-ல் வைத்திருந்தேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்றால் உள்ளேன். எதிர் என்னிடம் கொடுத்த காசோலை **Yes Bank,** கோயமுத்தூரைச் சார்ந்தது. தனபிரகாஷ் எதிரியின் மீது கொடுத்துள்ள வழக்கிலும் **Yes Bank** காசோலை தான் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரி உஜ்ஜீவன் வங்கியின் ஏன் தரவில்லை என்று அவரிடம் கேட்டேனா என்றால் இல்லை. என்னிடம் **Yes Bank** காசோலை தான் கொடுத்தார். எதிரிடமிருந்து **Yes Bank** சுமார் ஐந்து காசோலைகள் காணாமல் போனது குறித்து புகார் அளிக்கப்பட்டு அதில் என்னையும் விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியில்ல. காசோலை எதிரியின் வங்கி கணக்கு முடிக்கப்பட்டது என்று திருப்பப்பட்டதால் எந்த தேதியில் கணக்கு முடிக்கப்பட்டது என்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. எதிரிக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு ஆனது எதிரிக்கு சார்வு செய்யப்படவில்லை என்றாலும், அவரது தாயார் தனலட்சுமிக்கு தான் சார்வு செய்யப்பட்டது என்றால் சரிதான். எதிரிக்கு மீண்டும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். எதிரி காசோலையில் கையொப்பம் செய்யவில்லை என்றாலும், அவரிடம் இருந்து திருடப்பட்ட காசோலையில் நாங்களே கையொப்பம் செய்து கொண்டு இந்த வழக்கை தொடுத்துள்ளோம் என்றாலும் சரியல்ல. வங்கிக் கணக்கு முடிக்கப்பட்டது என்று திருப்பப்படும்போது அந்த காசோலையில் உள்ள கையெழுத்து சரிதானா என்று வங்கியில் குறிப்பிடமாட்டார்கள் என்றால் சரியல்ல. எதிரி எனது தந்தையை மிரட்டியதாக நீதிமன்றத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது எனது தந்தையும் மனைவியும் ஆவார்கள். எதிரி எனது தந்தையிடம் கேட்டபோது தனபிரகாஷிடம் இது குறித்து கேட்டு கொள்ளுமாறு கூறினார் என்றால் சரியல்ல. எதிரியை எனக்கு பழக்கம் இல்லை என்றாலும் அவர் என்னிடம் கடனாக பணம் வாங்கவில்லை என்றாலும் அவர் எனக்கு எந்த காசோலையையும் வழங்கவில்லை என்றாலும் சரியல்ல. தனபிரகாஷ் எனது நண்பர் என்பதால் எதிரியை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த பொய்யான வழக்கை தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பணம் வைத்திருந்த வங்கி கணக்கு குறித்த விவரத்தினை நீதிமன்றத்தில் ஒப்படைக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். உஜ்ஜீவ் வங்கியில் எதிரி எந்த வருடம் வேலை செய்தார் என்றால் எனக்கு

ஞாபகம் இல்லை. அவர் பணி புரிந்த விவரத்தினை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்வேனா என்றால் செய்வேன். எதிரியின் மீது போடப்பட்டது பொய் வழக்கு என்றாலும் அது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை:-</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

Judicial Magistrate No.II,

Tirupathur.